பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda बैंक ऑफ़ बड़ौदा

தில்லைநகர் கிளை,
C-56, 4th Cross, முதல்தளம், PL.சிவகாமி டவர்ஸ்,
தில்லைநகர், திருச்சி - 620 018, போன் : 0431 - 2765368,
மின்னஞ்சல் : thilla@bankofbaroda.co.in

SARFAESI ACT 2002-ன் கீழ் e-ஏல விற்பனை அறிவிப்பு மற்றும் கடன்தாரர் / ஜாமீன்தாரருக்கான அறிவிப்பு

பேங்க் ஆஃப் பரோடாவின் கீழ் சொல்லப்பட்ட கடன் தொகைகளை திரும்ப செலுத்த கடன்தாரர் / ஜாமீன்தாரர் தவறியதால், வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியினால் **SARFAESI ACT** 2002 பிரிவு 13 (2)-ன் கீழ் தொகையை கோரியும் செலுத்தாதல், பிரிவு 13 (4) மற்றும் **SECURITY INTEREST (ENFORCEMENT) RULES** 2002 விதி 8 (9)-ன் படி விவரிக்கப்பட்ட சொத்துக்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டது. அவை இப்பொழுது இந்த அறிவிப்பின் மூலம் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **SARFAESI** மற்றும் சம்பந்தப்பட்ட விதிகளின் கீழ் **"என்ன உள்ளதோ அப்படியே, எங்கு உள்ளதோ அந்நிலையிலேயே, உள்ளது உள்ளபடியே"** எனும் அடிப்படையில் ஏல விற்பனைக்கு உள்ளாக்கப்படுகிறது.

e-ஏல விற்பனை தேதி மற்றும் நேரம் : "06.12.2018 / 1.00 PM to 3.00 PM", e-ஏல விண்ணப்பம் முடிக்கும் தேதி மற்றும் நேரம் : "05.12.2018 @ 5.00 PM" குறைந்த பட்ச ஏல உயர்வு தொகை : ரூ. 10.000/-. கிளை : தில்லைநகர். **EMD A/c : 27480015181219, IFSC : BARBOTHILLA** (5வது இலக்கம் பூஜ்ஜியம்) தொடர்பு கொள்ள வேண்டிய நபர் : திருமதி. லெட்சுமி ஆனந்தன் - செல் : 94892 05950

கடன்தாரரின் பெயர் மற்றும் முகவரி : **M/s. பவானி சா மில், No.49/1,** தஞ்சாவூர் மெயின் ரோடு, திருவெறும்பூர், திருச்சி - 620 013. ஜாமீன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி : **1. கோபால் K படேல், 2. நாது K படேல், 3. மகேஷ் G படேல், 4. தீபக் G படேல், 5. ஜிதேந்திரா G படேல் & 6.திருமதி. ரமிலா K படேல்,** தஞ்சாவூர் மெயின் ரோடு, திருவெறும்பூர், திருச்சி - 620 013. கணக்கு எண் : 27480500000001 கோரிக்கை அறிவிப்பு தேதி : 07.02.2018 சொத்து கையகப்படுத்தப்பட்ட தேதி : 21.04.2018. கையகப்படுத்தப்பட்ட சொத்தின் நிலை : கன்ஸ்ட்ரக்டிவ். நிலுவைத் தொகை : 30.09.2018 தேதிப்படி ரூ.6,22,05,123.47/- + பின்வட்டி மற்றும் செலவினங்கள்.

சொத்துக்களின் விபரம்

சொத்து 1 : திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தாலுக்கா, திருவெறும்பூர் கிராமம், சர்வே எண். 49/1A, 49/2A பகுதியில் உள்ள மாநகராட்சி வார்டு எண். 34 யைக்கொண்ட 41581 சதுர அடி அல்லது 0.3865 ஹெக்டேர் பரப்பளவுடன் கூடிய, திரு. நாது K. படேல் மற்றும் கோபால் K. படேல் ஆகியோர் பெயரில் உள்ள ஈட்டுறுதி அடமானம் செய்யப்பட்ட தொழிற்சாலை இடம் மற்றும் கட்டிடம் ஆகியன. எல்லைகள் - கிழக்கு - IAS நகர், மேற்கு - பொதுத்தெரு (பவானி சாலை), தெற்கு - பொது சாலை (திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் சாலை) (தேசிய நெடுஞ்சாலை எண். 67) (நான்கு வழிப்பாதை, வடக்கு - அருள்மிகு எரும்பீஸ்வரர் கோவில் தேவஸ்தானத்துக்கு சொந்தமான இடம்

நிர்ணய விலை : ரூ.13,00,00,000/- | **முன்வைப்புத் தொகை : ரூ.1,30,00,000/-**

சொத்து 2 : சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுக்கா, உள்கடைதின்னனேரி கிராமம், கழுவன்குளம் கிராமம், சர்வே எண். 43/2, 43/6, 43/7 ல் உள்ள 8.06 ஏக்கர் பரப்பளவுடன் கூடிய, திரு. நாது K. படேல் பெயரில் உள்ள ஈட்டுறுதி அடமானம் செய்யப்பட்ட காலி இடம்.
எல்லைகள் - தெற்கு - நாது K படேல், க்ரேஸ் ராஜேஷ் வகையாறா, முத்து கருப்பனுக்கு சொந்தமான இடம் மற்றும் மற்றும் திரு. N.K.P. கருப்பனின் இடம், வடக்கு - மைனர் கோனார் வகையாறா, முத்து கருப்பன மற்றும் சங்கையா ஆகியோரின் இடம், கிழக்கு - மைனர் கோனார் வகையாறா, திருமலையழகு இடம் மற்றும் மேலமடை சீமான் ஆகியோருக்கு சொந்தமான இடம், மேற்கு - தென்வடல் வண்டிப்பாதை மற்றும் சுப்பையா இடம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பேங்க் ஆஃப் பரோடாவின் வலைதளம் www.bankofbaroda.com மற்றும் மின்னணு ஏல முகவரின் வலைதளம் https://bob.auctiontiger.net ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை பார்வையிடவும்.
மேலே உள்ள சொத்து திருவெறும்பூர் கிராமம், திருவெறும்பூர் பஞ்சாயத்து, திருவெறும்பூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ளது.

நிர்ணய விலை : ரூ.2,41,00,000/- | **முன்வைப்புத் தொகை : ரூ.24,10,000/-**

e-ஏல விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

கீழே விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் ஏல விற்பனை நடைபெறும் :-

1. **e-ஏல விற்பனை முறையில் ஏலம் மற்றும் விற்பனை. https://bob.auctiontiger.net இணையதளத்தின் மூலம் நடைபெறும்.**
2. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் காணும் வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரத்தை வங்கியே போதுமானதாகவும் அக்கறையுடனும் கொடுத்துள்ளது. அவற்றில் காணும் பிழைகள், விட்டுபோன விபரங்களுக்கு வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி பொறுப்பாகமாட்டார்.
3. விருப்பம் உள்ள ஏலதாரர்கள் தங்களுடைய ஏல விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலம் சம்பந்தப்பட்ட முழு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை **https://www.bankeauctions.com** மூலம் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் மேற்காணும் சொத்துக்கள் குறித்த விபரங்களை பற்றி அறிய சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரியை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. மேற்கூறப்பட்டுள்ள ஏல உயர்வு தொகையை நிர்ணய விலைக்கும் கீழே சொத்துக்கள் விற்கப்பட மாட்டாது. விற்பனையில் பங்கு கொள்ளும் ஏலதாரர்கள் தங்களுக்குள்ளாகவே ஏல நிர்ணய தொகைக்கும் மேலே விற்பனை தொகையை உயர்த்திக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
5. விருப்பம் உள்ள ஏலதாரர்கள் ஏல விண்ணப்பங்களை 05.12.2018 **அன்று மாலை 5.00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும். விருப்பம் உள்ள ஏலதாரர்கள் தங்களுடைய முன்வைப்புத் தொகையை **(EMD) : RTGS/NEFT** மூலம் பணப்பரிமாற்றம் செய்து ஏல விண்ணப்பங்களை 05.12.2018 **அன்று மாலை 5.00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும். முன்வைப்புத் தொகையை செலுத்திய ஏலதாரர்கள் பின்வரும் ஆவணங்களை **https://www.bankeauctions.com**-ல் 05.12.2018 **அன்று மாலை 5.00 மணிக்குள்** அப்லோடு செய்ய வேண்டும். இதற்கு தேவையான விபரங்களை மேற்படி இணையளத முகவரியிலேயே காணலாம்.
   அ) **EMD** முன்வைப்புத் தொகை செலுத்திய சான்று. ஆ) இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பான்கார்டு. சுயமாக கையெழுத்திட்ட புகைப்படம் மற்றும் வசிப்பிட முகவரியுடன் கூடிய அடையாள அட்டை ஆகியவைகளை வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி முன்பு சரிபார்த்தலுக்காக சமர்ப்பிக்க வேண்டும். இ) ஏலதாரரின் மொபைல் நம்பர் மற்றும் இ-மெயில் முகவரி. ஈ) ஏலதாரரின் வங்கி கணக்கு விபரங்கள் (முன் வைப்புத்தொகையை திரும்பி பெற்றுக்கொள்வதற்காக)
6. விருப்பம் உள்ள ஏலதாரர்கள் தங்களுடைய லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை https://bob.auctiontiger.net உருவாக்கம் செய்து கொள்ள வேண்டும். மேற்படி விபரங்களை அப்லோடு செய்வதற்காக உதவி தேவைப்பட்டால் M/s.E-Procurement Technologies Ltd., Internet Marketing Service in Ahmedabad, Gujarat, Address: B 704-705, Wall Street-2. Opp. Orient Club, Near Gujarat College, Ellis Bridge, Ahmedabad, Gujarat - 380006. Help line nos.9619002431, 9619120214, 6351896832, 6351896833, 9913326773, 9081000428. Help line Mail id: tamilnadu@auctiontiger.net-ல் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
7. EMD முன்வைப்புத் தொகை தபஎந/சஉஊப மூலம் பணப்பரிமாற்றம் செய்தவர்களுக்கும், யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்டு வைத்திருக்கும் ஏலதாரர்களுக்கு மட்டுமே ங்-ஏலத்தில் பங்கு கொள்ள உரிமை உண்டு. வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி மேற்படி ஏலத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ அல்லது அனைத்து விண்ணப்பங்களையும் ரத்து செய்யவோ உரிமை பெற்றவராவார். மேலும் மேற்படி அதிகாரி யாதொரு காரணமும் இன்றி எந்த தருணத்திலும் ஏலத்தினை ரத்து செய்யவோ, மாற்றி வைக்கவோ உரிமைபெற்றவராவார் மேலும் அவரது முடிவே இறுதியானதாகும்.
8. ஒரு வேளை ஏலம் முடிவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்பாக ஏதேனும் ஏல விண்ணப்ப தொகை சமர்ப்பிக்கப்பட்டால் அந்த சம்பந்தப்பட்ட விண்ணபத்திற்கு தானாகவே மேலும் 5 நிமிட கால நீட்டிப்பு வழங்கப்படும்.
9. இந்த நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு அதிகபட்ச ஏலத்தொகையுடன் கூடிய ஏல விண்ணப்பதாரரே இறுதியாக ஏலத்தில் வெற்றிபெற்றவராக தேர்ந்தெடுக்கப்படுவார் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிப்பெற்ற ஏலதாரர் விற்பனை தொகையில் 25% தொகையை உடனடியாக வங்கி கணக்கில் செலுத்த வேண்டும். அந்த 25% தொகையில் ஏற்கனவே செலுத்திய முன்வைப்புத்தொகையை சரி செய்யப்படும். 25% தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் அவர் செலுத்திய உங்ஈ டெபாசிட் தொகையை இழக்கநேரிடும். தவறும் பட்சத்தில் மேற்படி அதிகாரிக்கு வேறு ஒருவரை தேர்வு செய்ய மேற்படி சட்டம் பிரிவு 13 (4)-ன் படி உரிமை உண்டு.
10. விற்பனை தொகையில் 25% தொகைக்கும் குறைவாக செலுத்திய ஏலதாரருக்கு விற்பனை உறுதி செய்யப்பட மாட்டாது. மேலும் கடன் வழங்கிய வங்கியால் மட்டுமே விற்பனை உறுதி செய்யப்படும்.
11. வரிசை எண்.10-ல் கூறியது போல் டெபாசிட் தொகை செலுத்திய பிறகு மீதமுள்ள 75% விற்பனை தொகையை 15 நாட்களுக்குள் வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் அவர் முன்பு செலுத்திய முழு தொகையை இழக்க நேரிடும்.
12. மேற்படி சொத்துக்களை வாங்குவதற்காக ஆகும் சட்ட பூர்வ செலவுகள் மற்றும் இன்ன பிற செலவுகளான ஸ்டாம்ப் டியூட்டி, வரிகள் அனைத்தையும் சொத்துக்கள் வாங்கும் ஏலதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
13. ஏல விண்ணப்பத்தில் காணும் பெயர் கொண்டவருக்கே அவரின் பெயரிலேயே விற்பனை சான்றிதழ் வழங்கப்படும்.
14. வங்கி அறிந்த சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்கங்கள் அனைத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தில் வில்லங்கங்கள் இருக்குமானால் அவை சம்பந்தப்பட்ட விபரங்கள், சம்பந்தப்பட்ட செலவுகளுடன் வெற்றி பெற்ற ஏலதாரரே தெரிந்து கொள்வது அவசியம். வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியோ, வங்கியோ இவற்றிற்கு பொறுப்பு ஆக மாட்டார்.
15. ஏலதாரர்கள் மேற்படி இ-ஏலம் தொடங்குவதற்கு முன்பாகவே இணையதள வசதிகளை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். இவற்றில் ஏதேனும் தடங்கல்கள் சம்பந்தப்பட்ட ஏலதாரர்களுக்கு நேர்ந்தால் வங்கி பொறுப்பாகாது.
16. மேற்படி ஏலதாரர்கள் மேற்காணும் சொத்துக்களை பார்வையிட விரும்பினால் வங்கியின் அங்கீகாரம் பெற்ற கிளை மேலாளரின் முன் அனுமதியுடன் கூடி வங்கியின் ஏதேனும் வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள் பார்வையிடலாம்.
17. வங்கியின் தீர்மானத்தின் படி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்கள் ஏலத்தில் விடப்படும்.
18. மேற்படி ஏல விற்பனையை / விண்ணப்பங்களை யாதொரு காரணமுமின்றி ஒத்துக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ வங்கிக்கு உரிமை உண்டு.
    கடைசி நிமிட ஏல செயல்பாடுகள் நடத்துவதை ஏலதாரர்கள் தவிர்க்க வேண்டும். இ-ஏல நேரத்தில் ஏலதாரர்களுக்கு நேரும் தடங்கல்களுக்கு வங்கியோ அல்லது மேற்காணும் வங்கியால் பரிந்துறைக்கப்பட்ட சேவை அளிப்பவர்களோ பொறுப்பாகமாட்டார்கள். ஆகையால் இந்த தடங்கல்கள் இ-ஏல நேரத்தில் நடக்காதவாறு ஏலதாரர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.
    இந்த இ-ஏல விற்பனை அறிவிப்பு பேங்க் ஆஃப் பரோடா இணையதளத்தில் (www.bankofbaroda.com) மற்றும் இ-ஏல அறிவிப்பு முகவர் https://bob.auctiontiger.net என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இடம் : தில்லைநகர், திருச்சி
நாள் : 30-10-2018

அதிகாரப்பூர்வ அலுவலர்.
பேங்க் ஆஃப் பரோடா.